1975 ஏப்ரல் 7]

ஆனால், இன்றைக்கு பல அரசு அலுவலகங்களில் கடவுள் படங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் உடனடியாக அகற்றுவதற்கு நம்முடைய அரசு விரைவில் உத்தரவு அனுப்புமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அண்ணா அவர்கள் காலத்தில் அப்படிப்பட்ட ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டதென்பது உண்மை. ஆகவேதான் இதிலே எல்லா அலுவலர்களுக்கும் பொதுவான வகையில் திருவள்ளுவர் படங்கள் அமைக்கப்படவேண்டும் என்கின்ற கருத்தை இந்த அரசு ஆணையாகப் பிறப்பித்திருக்கிறது.

திரு. கு. காமாட்சி : தலைவர் அவர்களே, அரசு அலுவலகங்களில் வைக்கப்படும் வள்ளுவப் பெருந்தகையின் படத்திற்குக் கீழே அவருடைய குறள் வாசகங்கள் ஏதாவது எழுதப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது பயணிகள் விடுதியில் வைக்கப்படுகிற படங்களில்,

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி

என்கின்ற குறள்மொழி எழுதப்பட்டிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : சார், முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, எல்லா அரசுக் காரியாலயங்களிலும் உள்ள கடவுள் படங்களை அகற்றுமாறு அண்ணா அவர்கள் உத்தர விட்டார்கள் என்று கூறினார்கள். அப்படியானால், நாம் அற நிலையத் துறையை வைத்துக்கொண்டு நிர்வகிக்கிறோமே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வள்ளுவர் படத்தைப் பொறுத்த வரையில் கேளுங்கள். அற நிலையங்களுக்கெல்லாம் போகாதீர்கள்.

திரு. எம். சுரேந்திரன் : கோயில்களெல்லாம் அறநிலையத் துறையின் கீழ் வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோயில், குளங்களைப்பற்றி யெல்லாம் இதில் கேட்காதீர்கள். அறநிலையத் துறைக்கும் போக வேண்டாம். வள்ளுவர் படத்தைப் பொறுத்து மட்டும் கேள்வி கேளுங்கள்.